உ

கணபதி துணை.

திருநந்திதேவரருளிச்செய்த

ஆறுதார

ஜீவோற்பத்திசிந்தாமணி

யும், தத்துவதீபிகையும்,

இவையிரண்டு மிருக்கின்றன

திருத்தமான பதிப்பு.

"வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன"

முதற்பதிப்பு—காப்பி-1000.

1904.

இதன் விலை அணா - 2.

உ

கணபதி துணை.

—:0:—

திருநந்திதேவர் அருளிய

ஆருதார

ஜீவோற்பத்திசிந்தாமணியும்,

தத்துவதீபிகையும்,

இவையிரண்டு மிருக்கின்றன.

முதற் பதிப்பு.

தமது

வாணீவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

இதன் விலை [illegible]

1903.

சிவமயம்.

ஆ ரூ த ா ர

ஜீவோற்பத்தி சிந்தாமணி.

காப்பு.

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை முன் னூடு.

நூற்பெருமை.

நமசி வயமென் றுரைத்த மந்திரம்
நவ்வொடு மவ்வும்போய் மாய்கை வலமதாய்
யவ்வான ஜீவன் வவ்வுறச் சேர்ந்திடில்
சிவமினி லொன்றாய்ச் சிவமென லாமே.

(இதன்பொருள்.)

நகாரம்-திரோதாசத்தி, ஆத்துமாக்களைப் பிரபஞ்சத்திலே இச்சையை வருவிக்கும்.

மகாரம்-கிரியாசத்தி, ஆத்துமாக்களைப் பிரபஞ்சத்தில் மெய்யென்றழுத்தும் சிவத்திலே ஆசையை வருவித்துச் சிகாரத்தோடு கூடிநிற்பது.

சிகாரம் - நின்றசிவத்திலே ஆசையை வருவித்து மகாரத்தோடு கூடிநிற்பது.

நின்றவெழுத்துமூன்றும்

செபிக்குமிடத்து ஒன்றாகும்.

நமசிவயமென்றோதப்பட்ட வைந்தெழுத்துக்குள்ளே ஐந்தெழுத்துண்டு; இந்த ஐந்தெழுத்தினையும் மூலஅட்சரமாகிய அகாரம்-உகாரம்-மகாரம்-விந்து-நாதம்-என்கிற அட்சரங்களைச் சேர்ப்பதெப்படியெனில்; சிகாரத்தில்-அகாரமும், வகாரத்தில்-உகாரமும், யகாரத்தில்-மகாரமும், விந்து-நகாரமும், [redacted], நாதம்-மகாரத்திலுமாம், இந்தப்படிசேர்ந்த ஐந்தெழுத்தும் ஓடுகிறவித மெப்படியெனில்?

நகாரமானது-விந்து, திரோதாசத்தி பிரபஞ்சத்திலே இச்சையை வருவிக்காமல் சிவத்திலே இச்சையை வருவித்துச் சிகாரத்தில் ஐக்கியமானது.

மகாரமானது-நாதம், கிரியாசத்தி பிரபஞ்சத்தை மெய்யென்றழுத்தாமல் சிவத்திலே ஆசையை மெய்யென்றழுத்தி வகாரத்தில் ஐக்கியமானது, நின்ற

எழுத்தை ஓத முன்சொன்ன மூன்றெழுத்தும் ஒன்றாயின.

அதெப்படியெனில்; பராபரமாகிய பரமேஸ்வரன் ஆதிகாலத்தில் ஆத்மாக்களை இரட்சிக்கத் திருவருள் புரிந்தமையால் பராபரையான சத்தியின் துடையில் தம்முடைய பெருவிர லங்குஷ்டங்கொண்டு கீறுகையினாலே பராசத்தி பொறுக்கமாட்டாமல் ஓவென்றாள்? அப்போது பராபரமாகிய பரமேஸ்வரன் ஆவென்றமைத்தார்? அந்தவெழுத்து அகாரமானது, அப்போது பராசத்தி அடக்கமாய் ஊவென்றாள்? அந்த எழுத்து உகாரமானது, இந்த இரண்டெழுத்துக்களுஞ் சத்தியுஞ் சிவமுமானது இவ்விரண் டெழுத்தும் ஓரட்சரமானது எப்படியெனில்;

அகாரம் இலக்கத்தில்-அ, பின்சொன்ன உகாரம் இலக்கத்தில்-உ, இவ்விரண்டுமாய் தொகைக்கு-ய, ஆயின.

யவ்வானது-ஜீவன், அந்தச்சீவனைச் சத்தியுஞ் சிவமுமாகக்கூடி ஆத்துமாக்களை சினேகத்தை வருவித்தது; நவ்வானது திரோதாசத்தி, இச்சினேகத்தை மெய்யென்றழுத்தி மிகவும் இருதலையுண்டாக்

இனது; மகாரமானது கிரியாசத்தி, இவை யிரண்டி னும் பற்றுமல் நிற்கின்றது; யவ்வானது ஜீவன், இ வையிரண்டும் விந்துநாதமானது இந்த உருக்கத் தைச் சத்திபெருளென்றறியாமல் நின்றது; கேவல மான இருள் எப்போது பெறுவோமென்ற விகா ரம் சகலமான பகல் இவை யிரண்டுக்கும் இரா வு பகலென்றுபேர்; இதுவன்றி ஞான முறைமை க்குச் சகலாவஸ்தையென்றும் கேவலாவஸ்தை என் றும்பேர்.

சிதம்பரத்திலே சிநேகமாயிருக்கையினுலே பரா பரமாகிய பரமேஸ்வரன் மானைப்பிடிக்க மான்வே டங்கொண்டதுபோல் இராப்பகலே குருவென்று வடிவெடுத்துக்கொண்டு ஆதிகபிலமாமுனிவர் திரு வள்ளுவநாயனுர் வடிவமாய்த் திருக்குருந் தீஸ்வர ராகிய திருமூலதேவருக்குத் திருவாய் மலர்ந்தருளி ய உபதேச வைப்பாகும்.

சிவாயநம:

தோற்றமுமொடுக்கமும் அறியும்படி.

பராபர மாகிய பரமேஸ் வரன்
தராதலம் படைக்கத் தானினைந் தருளி.

பராபரத்திற்-பரந்தோன்றி, பரத்திற்- சிவந்தோன்றி, சிவத்திற்-சத்திதோன்றி, சத்தியில்-நாதந்தோன்றி, நாதத்தில்-விந்துதோன்றி, விந்துவில்-சதாசிவந்தோன்றி, சதாசிவத்தில் - மகேசுவரந்தோன்றி, மகேசுவரத்தில் - ருத்திரன்தோன்றி, ருத்திரனில்-விஷ்ணுதோன்றி, விஷ்ணுவில்-பிர்மாதோன்றி, பிர்ம்மாவில்-ஆகாயந்தோன்றி, ஆகாயத்தில் - வாயுவுதோன்றி, வாயுவில்-அக்கினிதோன்றி, அக்கினியில்-அப்புதோன்றி, அப்புவில்-பிருதிவுதோன்றி, பிருதிவியில்-அன்னந்தோன்றி, அன்னத்தின்கண்ணே-நரமிருகபட்சி தாபரசங்கமாதிகள் தோன்றின.

இவ்விதமாய்த்தோன்றிய அடைவே நரமிருக பட்சி தாபரசங்கமாதிகள் அன்னசத்திலொடுங்கி, அன்னம்-பிருதிவியிலொடுங்கி, பிருதிவு-அப்புவிலொடுங்கி, அப்பு-தேயுவிலொடுங்கி, தேயு-வாயுவிலொடுங்கி, வாயுவு-ஆகாசத்திலொடுங்கி, ஆகாசம் - பிர்ம்மாவிலொடுங்கி, பிர்ம்மா-விஷ்ணுவிலொடுங்கி, விஷ்

ணு-ருத்திரனிலொடுங்கி, ருத்திரன்-மகேசுவரத்தி லொடுங்கி, மகேசுவரஞ் - சதாசிவத்திலொடுங்கி, சதாசிவம்-விந்துவிலொடுங்கி, விந்து-நாதத்திலொடுங்கி, நாதஞ்-சத்தியிலொடுங்கி, சத்தி-சிவத்திலொடுங்கி, சிவம்-பரத்திலொடுங்கி, பரம்-பராபரமாகிய பரமேஸ்வரனிடத்தில் ஒடுங்குமெனக்காண்க.

அத்துவா தத்துவம்.

அன்னத்தில்-ரஸந்தோன்றி, ரஸத்தில் - உதிரந்தோன்றி, உதிரத்தில்-மாம்சம்தோன்றி, மாம்சத்தில்-மேதைதோன்றி, மேதையில்-அஸ்திதோன்றி, அஸ்தியில்-மச்சைதோன்றி, மச்சையில் - சுக்கிலந்தோன்றி, சுக்கிலத்தில்-சுரோணிதந்தோன்றியது.

இப்படித்தோன்றிய சுக்கிலசுரோணிதங்கள் அணுப்பிரணமாணமுள்ள ஒருருபுபோலப் பாய்ந்து குதித்துக் கண்டிப்பும் பேரிகையும்போலே கண்டித்து நடுவெளியில் ஒருசுழிமுனையுண்டாய் அம்முனையினடுவே ஒருதுவாரமுண்டாய் அத்துவாரத்தினடுவே இரண்டெழுத்துகளாலே அபிமந்திரித்துப்பிண்டமாகி யெழுமளவில்;

சுக்கிலம்பெருகில்-ஆணும்; சுரோணிதம் பெருகில்-பெண்ணும்; இந்தச் சுக்கிலச்சுரோணிதம் நேகித்துப்பெருகில்-இரட்டைப்பிண்டமாம்; அப்பிண்டமானது நீர்வழியேபெருகில்-ஊமையாம்; மலக்கிடையேயாகில் மந்தனும்?

இப்படிக்குக் கெற்பவுற்பத்தி கொள்ளுங் காலத்தில் இரத்தக்கலையென்றும் இரஸக்கலையென்றும் இரண்டுகலைகளுண்டு.

அவற்றுள் எரிகலையிலே பிராணேந்திரியம் பாயில் இடப்பாகங்கொண்டு கிருமியென்னும் புழுச்சென்று விழுங்காமல் கன்றோடுதாய்ச்சென்று தொடர்ந்தாற்போலே பிராணவாய்வை ஆத்துமா முன்னிட்டுக்கொண்டு செல்லுமளவில் இதமகித மென்னும் இரண்டட்சரமும் பின்தொடர்ந்துசென்று அச்சுக்குள்ளச்சாக அவ்வென்னு மூலாட்சரத்தில் அமைத்துப் புகவிட்டு கிழிச்சிலை வாசல்போலே ஓடி அங்கிஷாவென்னு மந்திரக்கயிற்றாலே சுருக்கிக்கட்டி சிவாக்ஞா சக்கரத்திடையிலே முத்திரையிட்டு தான் ஒருத்திபாய்நின்று இந்தக்கருவை வளர்க்கும்படியாய் கெற்பஉற்பனத்தை உதானவாயுவான மூலவாயு வளர்க்கும்.

அது எப்படியெனில்; கெற்பாகுதியென்னும் பவக்கடலில் எண்ணைவாயு வளர்க்கும்.

அது எப்படியெனில்; எண்ணெயுந் தண்ணீரும் போலநிற்கிற சுக்கில சுரோணிதத்தைப் பாலும் நெய்யும்போலே பாய்ந்தவுடனே கற்பிக்குங்கற்பைச் சுருக்கினாற்போலே வாசலைபடைத்துக் கருவை வெளியாக்கி ஒன்றாந்திங்களில் உதிரந்திரளும், இரண்டாந்திங்களில் கொழுந்துவிட்டு அச்சுஅமையும், மூன்றாவதில் மாமிசந்திரண்டு மூட்டுருவாகும், நான்காவதிலோ தண்டமாய் நரம்பு நாடிகளமையும், ஐந்தாவதில் பஞ்சவன்னமாய் இந்திரியகர்த்தால் அழியினும்அழியும், செழிக்கினுஞ்செழிக்கும், ஆறாமாதத்தில் அதிற்புகுந்து ஆமையின் வடிவமுற்று கால் கைகள் வகுக்கக்பட்டு நவத்துவாரங்களுமுண்டாகும்; ஏழாமாதத்தில் கற்பத்திலிருந்து எழுந்து முழக்கமுற்று கெற்பத்தைச்சூழ்ந்து புரளும், ஏனெனில் (௭௨த) நாடிகரம்புகளும், ஆறுதாரமும், ஐந்தெழுத்தும், ஐம்பத்தோராட்சரமும், பஞ்சபூத தேவதைகளும், தூலசூக்குமத்துடனே கொழுந்துவிடப் பேதையாம்; எட்டாமாதத்தில் நீட்டிமுடக்கி தாயுண்ட அன்னசாரத்தைத் தொப்புளி

ன்வழியாகவுண்டு பிள்ளையினுடல் வளர்ந்து தாயுடன்தோன்றி உயிருடன் ஆடும், ஒன்பதாவதில் தலைகாலளவும் ரோமத்துவாரமுண்டாம், ரோமக்குருத்து அறிவுடனே உரங்கொள்ளுகையில் விதனம் பொறுக்கமாட்டாமல் ஈசுவரனைநோக்கித் தவஞ்செய்து தொழுகையுடனே பிரிந்து ஜனனத்தை ஒழித்தருள வேணுமென்று வணங்கிநிற்கும், பத்தாவது மாதத்தில் நிறைந்தபிண்டமாய் மலைமேல்நின்று தலைகீழாய் விழுந்தவர்களைப்போலே அபானவாயுவின் பலத்தினாலே பூமியில்விழுந்தும் முன்னுள்ள நினைவுகளை மறவாதிருக்கும்.

இப்படி பரப்பிரமம் சிருஷ்டிப்பினாலே கர்ப்பந்தரித்து வாழ்வுபெறும்.

அப்பேர்ப்பட்ட பிராணவாய்வு வலப்புறமோடில் ஆண்பிள்ளையாம்; இடப்புறமோடில் பெண்பிள்ளையாம்; வாயுவிரண்டும் ஏகோபித்தோடில் அலியாம், அதாவதுபேடி; அல்லது குறியற்றது.

அந்தவேளையிலே நடந்தவாயு பேதியாமல் ஐந்துநாழிகையளவும் நடந்தியங்குமாகில் அந்தப் பிள்ளைக்குவயது-ா, அந்த அளவு குறையுமாகில் பிள்

ளைக்கு வயதுங்குறையும், வாய்வு நிரம்பியோடில் அவயவங்களுண்டாகும், அவ்வாய்வு சிதறியோடில் அவயவங்கள் குறையும், முதன்மையில் கெற்பாந்தனத்தில் போகிக்கும்பொழுது மூன்றுகுணத்திலே ஒன்ருவது மாதா பிதாக்களுக்கு உண்டானல் மக்களுக்கும் உண்டாகும்.

அந்தவேளையில் வாய்வு நின்றியங்குமாகில் நிலத்தின்நிறமே பிள்ளைகளுக்கு நிறமாகும், மாதா பிதாக்களினுடைய மனமும் குணமும் வாய்வு மொன்ருகுமாகில் அந்தப்பிள்ளைக்கு மிகவும் அறிவுண்டாகும்.

மாதாபிதாக்களுக்கு அந்த மூன்றுவிதமுஞ் சிதறில் பிள்ளைமரித்துப்போம், கர்ப்பாசனத்தை விட்டு கெற்பங்கரவழியிலும் போக்கிலும் அக்கினிமிகுக்கிலும் வாய்வு கலங்கிலுமல்மாம், ஸ்திரீ புருஷர்களிருவருக்கும் மூலாக்கினி அதிகரித்தால் அந்த கர்ப்பஞ் சுவறிப்போம்.

இப்படி கன்மானுபவத்திற்கீடாக எடுக்கப்பட்டசரீரத்தில் முன்சொன்னவழியே அருந்தின அன்னுகாரமானது முப்பது நாழிகையில் எங்குற்றதெனில்,

மலஜல இரத்தமாகிய மூன்றுகூருகும்; இதில் இராப்பகல் அறுபது நாழிகையில் மலஜல மென்ற இரண்டுகூறு கழிந்துபோம்; மற்ற ஒருகூருகிய இரத்தமானது சரீரத்தில்தங்கும்; அந்த இரத்தமானது ஏழிலொருபங்கு இந்திரியமாம்; மற்ற பங்குளோவெனில்? தோல், உரோமம், சதை, கற்பம்,மேதை, அஸ்தி, குடும்பி, மூளை, சுக்கிலம், தியம்பு, குடல், நரம்புமுதலிய விடங்களுக்கு முறையே எஉ- நாழிகைவீதம் பரவிநிற்கும்.

இனி இந்தச்சரீரத்தில் இருவினைக்கதவுங்கூட்டி மூலத்தண்டாகிய நெடுங்கயிற்றை முகட்டுவளையாகச்சேர்த்து பழுவெலும்பாகிய வரிசையிட்டு நரம்பாகிய யாக்கையாலே கட்டி உதிரமாகிய ஜலத்தாலேமண்கூட்டிச் சுவரேற்றி ரோமமாகிய கத்தையாலேமேய்ந்து எடுக்கப்பட்ட வீட்டுக்கு நவத்துவாரமென்னும் வாசலிட்டு, அச்சமாகிய கதவுகளிட்டு, பல்லாகிய தாள்பூட்டி, நாவாகிய ஓங்காரம்பாய்ச்சிப், பண்டமாகிய பஞ்சேந்திரியங்களு முடைத்தாய் நிற்கும்.

இந்தச்சரீரத்தில் பதினுறு கதவுபூட்டிய வீணத்தண்டும் மொழியென்னு முச்சாணெலும்பும், மு

ச்சாண்சதையும், அஞ்சுருவும், ஆறுதெருவும், ஏ ழுகடலும், எட்டுதூணும், நாலுசாண்பருமனும், ஏட்டுச்சாண் நீளமும், முப்பத்திரண்டு முழக்குட லும் இருக்கும்.

இது மூலதாரத்தைத்தொட்டு ஆக்ஞையளவும் பெருநரம்புகள்(௰௧௲) சிறுநரம்பு(௰அ௲) கையிலு ம் காலிலும் பெருநரம்பு (எ௲) சிறுநரம்பு (௰௨௲) நாபிதானத்தில் பெருநரம்பு (௲) சிறுநரம்பு (௨௲) நவத்துவாரத்துக்கும் வாசல் ௯ - க்கு பெருநரம்பு (௲௫௱) சிறுநரம்பு (௩தரு௱) முடிவில்பெருநரம்பு (௩௲) சிறுநரம்பு (௬௲) எலும்பிலுங் குடலிலும் சிறுநரம்பு (எ௲) ஆக நரம்பு நாடி (எ௰௨த.)

இனி கால்களிலும் கைகளிலும் சந்துப்பொருந்த ல் (௬௯) கழுத்துக்குக்கீழ்ச்சந்து (அ௬) கழுத்துக் குமேற்சந்து (அ௩) ஆக சந்துபொருந்தல்(௩௩எ.)

இனி நாசியில் ஜலம் பலம் (௪௧) எலும்பில் ஜல ம் பலம் (எ) மாம்சத்தில் ஜலம் பலம் (௨௧) ஆக ஜ லம் பலம் (௬௯.)

காலிலும் கையிலும் எலும்புகள் (௱௬௰) மூலா தாரத்தைதொட்டு ஆக்ஞையளவும் மொழியெலு

ம்பு (கஙு) கழுத்துக்குமேல் பொடியெலும்பு (கா) இருபக்கத்திலும் எலும்பு (உ௰) ஆக எலும்பு (ருா௰.)

இனி சரீரத்தில் (கஉ) கோடி ரோமத்துவாரங் களும், நாளொன்றுக்கு (உகதசுா) சுவாசமும், (சுசு) தத்துவமும், (கசு௰) பலம் மாம்சமும் உழ க்குபித்தமும், ஆழாக்குச் சேத்துமமும்கூடி சரீ ரத்திலே நாளொன்றுக்கு நடக்கும் பிராணவாயுவு, (௰உ) விரல் பிரமாணம் புறப்பட்டு நாலுவிரல் பிர மாணங் கழிந்துபோய் (அ) அங்குலம் உடம்பூடு ருகி சப்ததாதுகளை வளர்க்கும்.

இனி ஜீவராசிகளின் வாழ்நாளின் விவர மெப்படி யெனில்.

வயதளவு ா-க்கு ௰ வயதளவும் இளமை, உ௰-வ யதினளவும் வாலிபம், உரு-ஙு௰-ச௰-இதுவரையில் யௌவனம், சரு-ரு௰-இவைகளில் கவுமார திசைய டைந்து ஒளிமழுங்கலுற்று பிரிதிவு-அப்புவை நெ ருக்கும், அறுபதில் அப்பு - தேயுவை நெருக்கும், எ௰ - தேயு-வாயுவை நெருக்குதலினால் தாதுமாயா வுணர்வு பண்டுபோலே செலுத்தும், அ௰-வயதில்

வாயுவை ஆகாசத்தைநெருக்கும், கூ௰-வயதில் ஆகாசம் ஆத்துமாவை நெருக்கும், அதனால் மலஜலம் இடைவிடாமல்ஒத்துநிற்கும் ௱-வயதில் ஆத்துமா வந்த வழியை நோக்கும்.

இப்படிப்பட்ட சரீரமானது முன்சொன்னஆறு திங்களில் முந்தாகல் சற்குருவின் தாளே சரணமென்று திருக்குருந்தீசுரர் ஆதி திருமூலதேவருக்கு திருவுளம் பற்றியருளிய முறைமை கூறினேம்.

தோற்றவொடுக்கம் முற்றிற்று.

அத்துவாத்துவ கலைஞானம்.

அட்சரம், ஆகாரம், கரணம், அவஸ்தை, பொறி, புலன், இளமை, வறுமை, வேகம், புராணம், சரிகை, கிரிகை, யோகம், மெய்ஞ்ஞானம், இவ்விதமென்று குருவருள்செய்யச் சீடன் கேட்டுத்தெளிந்து அருட்பிரகாசத்திலே சர்வ அஞ்ஞானங் களையும் ஞானக்கினியினாலே சுட்டுப்போட்டு களிப்புற்று சிவத்துடனேநின்று தெளிவுறவே எப்போதும் சிவஞானியென்று ஒட்டியாணம்பூட்டி ஆனந்தமென்னும் ஞானமிர்தத்தையருந்தி ஓம்நமாவென்னும் ஞானமுத்திரையிட்டு அழியாப்பதவியாக மோட்ச

சாம்பிராச்சியத்தை யடைபவருக்கே சீவன் முத்த ரென்று பேராம்.

இப்படிப்பட்ட பெருமையை யடையு மவர்களு க்குப் பரகதி கிடைக்காததற்குக் காரண மேதோ வெனில்.

பரகதிக்கு வில்கல்.

——:0:——

காயாபுரியென்னும் பட்டணமும்; அந்திரசூத்தி ரமென்னும் உட்கோட்டையும்; நவத்துவாரமாகிய வாசல்களும்; இரணமென்னு முகப்பும்; சுவாதிஷ் டானம், மணிபூரகம், அனுகதம்,விசுத்தி, ஆக்ஞை என்னும் அரண்களும், அக்கினிமண்டலம், ஆதித் தமண்டலம், சந்திரமண்டலம், ஆகிய சொற்கமத் திய பாதாளமாகிய லோகஙகளும்; அங்கராஜன்,மூ ர்க்கராஜன் என்னும் இரண்டுராஜர்களும்; மூலப்பி ரகிருதியென்னுந் துன்மந்திரியும்; பஞ்ச பூதர்களெ ன்னும் பிரதானியர்களும்; அலகையென்னும் வீதி களும்; இச்சாசத்தி, கிரியாசத்தி, போகசத்தி, ஞா னசத்தி, பராசத்தியென்னும் ஊழியக்காரிகளும்; அசனைபயென்னும் அடப்பக்காரனும்; கெர்வித

னென்னும் களாஞ்சிக்காரனும்; கால கர்மனென்னும் தளவானும்; மனம், புத்தி, சித்தம், ஆங்காரமென்னும் காணிக்காரனும்; மாயப்பிரபஞ்சமென்னும் வன்னிநாயகப்பாடிகரும்; சத்த, பரிச, ரூப, ரச, கந்தமென்னும் கொல்நாயக்கர்களும்; காம, குரோத, லோப, மோக, மதமாச்சரிய, இடும்பை, ஆங்காரமென்னும் கள்ளரும்; இதமகிதமென்னும் மல்லர்களும்; ஆணவம், மாய்கை, காமியம்என்னும் கோட்டைக்காரரும்; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் என்னும் கன்னக்காரரும்; சாக்கிர, சொப்பன, சுழூத்தி, துரியம், துரியாதீதமென்னும் தலையாரிகளும்; அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆனந்தமயமென்னும் காலாட்களும்; வாயு, தேயுவென்னும் புரவிகளும்; மனோபதியென்னும் கர்ணீகனும்; நவகோடியென்னும் ராவுத்தனும்; இருதயபாதரென்கிற தானுபதிகளும்; சதகோடி மகாமந்திரமென்னும் உபதளமும்; வாத, பித்த, சேத்துமமென்னும் பரிவாரமும்; அஷ்டமதமென்னும் யானைகளும்; நாலு வேதமென்னும் ரதங்களும்; அசுத்தம், சுத்தமென்னும் தேவியரும்; இருவினையென்னும் தோழிகளும்; இவர்கள்யாவரும் கூட்டமாகக் கூடிக்கொண்டு தங்களில் தாங்க

ளே ஒருவருக்கொருவர் ஒப்புரவற்றவர்களாய் மூன்
னுரைத்த காயாபுரிக்கோட்டையை வளைந்துகொ
ண்டு ஒன்பது வாசலுக்கும் அஷ்டமதமென்னும்
யானைகளைவிடுத்து யுத்தஞ்செய்கையில் ஒருவருக்
கொருவர் தங்களால் இந்தக்கோட்டையை ஆளுகி
றதற்கு சாத்தியப்படாமல்; காரிய உபாதியாலும்,
காரண உபாதியாலும், ஸ்தூலசூக்ஷமாதி தேகத்
தினாலும், சதுர்விதோபாயத்தினாலும் ஆராய்ந்து,
இந்தக்கோட்டையைக் கைக்கொள்ளும்படி பராப
ரமாயிலங்குகின்ற சற்குருநாதன் மானைப்பிடிக்க மா
ன்சட்டை யுடுத்ததுபோல திருநந்திதேவரான சற்
குருநாதர் ஆதிகபிலராகிய திருவள்ளுவராய் திரு
மூலதேவருக்குத் திருவாய்மலர்ந்தருளியவாறு இத
யமென்னும் வில்லுக்குப் புரியென்னும் நாணியை
ப்பூட்டி, அறிவுயென்னும் அம்பைத்தொடுத்து,
குருவென்னும் இலக்குநோக்கி, மூலாதாரத்தின் இ
ரண்டு நாகு நெட்டெழுத்தின் நடு நடுத்தெழுத்தி
லேயிருந்து வங்கென்று வளைத்து சங்கென்று சன்
னிதனைப் அங்கிஷாவென்றியங்குவித்து சங்கென்
று ஆக்ஞையா சக்கரத்திலேபுகுந்து அக்கினிமண்
டலத்தில் அனைவரையுங் காண்பித்துக்கொண்டு
ஆயாவாளென்னும் இடைபிங்கலை இரண்டுக்கும்

படிக்கதவிட்டு, ஆதிமூலமென்னும் யானைமேற்கொண்டு, தண்டுக்குந் தனுவுக்கும் நடுக்குத்தென்னுங் குரசுக்கயிற்றுக்குள்ளாக, அன்னதானத்தி லுற்றளவில் அங்கென்று மேனோக்கி, ஆதிகாலமும் அவ்வையும் பதியுங்கொண்டு நடுவணையென்னும் ருத்திராக்கினியான பன்னிரு சமுத்திரத்திலே ஆனையை நீராட்டுவித்து, ஞானபரமென்னும் காவணமிட்டு, அங்கென்று மேனோக்கி யுற்றளவில்சித்திர நாடிவழியேசென்று, சந்திராபுரியென்னும் மண்டலமுங்கொண்டு, அக்கினிமண்டலத்தில் அஞ்செழுத்திலேயும், ஆதித்தமண்டலத்தில் மூன்றெழுத்திலேயும், சந்திரமண்டலத்தில் ஓரெழுத்திலேயும், ஆசனமாயிருந்த பிறகு திரிமண்டலாதிபன் பின்னிட்டு மந்திரியுபதேசப்படி வைத்துக் காயபுரியென்னும் பட்டணத்தைக் கொள்ளாமற்கொண்டு, அதிகாயனென்னும் பிரபஞ்சங்களையெல்லாம் கருவோடறுத்து, பின்பு சத்தியஞானப் பிரகாசமான மனதிருத்தேரிலே யெழுந்தருளிய பின்பு அறிவுகந்து நரலோகங்கொண்டருளிய பின்பு காயாபுரியைநோக்கி; திருநந்திதேவர், ஆதிகபிலமஹாரிஷி, திருவள்ளுவர்சாக்ஷியாகத் திருமூலதேவருக்குத் திருவுளம்பற்றியருளிய முறைமையிலே திருமூலதேசிகர்நின்

றுநகைசெய்தளவில், காயாபுரிபட்டணத்தில் யோகாதியுங்கெட்டு, இரவ கெந்துருவ பதாதிசேனையு ம்பட்டு, ஆயாக்கினி வேந்தனும் சிறப்புண்டுபோய் காயாபுரியென்னும் பட்டணத்தில் சொர்க்கமத்திய பாதாளலோகமளவாக திருவடி வைத்துக்கொண்டு ராச்சியஞ் செய்தபடிக்கு திருநந்திதேவர், ஆதிகபிலமகாரிஷி, திருவள்ளுவர் சாட்சியாகத் திருமூல தேவருக்கு அபயாஸ்தமுங்கொடுத்தருளி அபிஷேகமுஞ்சூட்டி, சித்தாந்தமும் வேதாந்தமுங் கடந்த நாதாந்தமுடிவான அமுர்தபஞ்சாட்சர துருவநிலையில சூக்ஷம்புகட்டி, இப்படி யுணர்த்தியருளிய முறைமையை உட்பட்டுத்தேடாதவன் சிவஞானியல்லவென்று இந்தமுறைமைய உட்பட்டுத்தேடினபெரியோர்களுக்குப் பராபரத்தில் உத்தரங்களும் வெளியாயிருக்கும்.

பிண்டத்திற் கண்டபொருள் அண்டத்திற் காணலாம், அண்டத்திற்குள்ளது பிண்டத்துமுண்டெனக் கொள்க.

ஆ ரு ந ா ர

ஜீவோற்பத்தி சிந்தாமணி

முற்றும்.

சிவமயம்.

தத்துவதீபிகை.

சரீரத்தினளவு பிரமாணாதிகளின் விவரம்.

—:o:—

இந்தச் சரீரமானது அவரவர்கள் கையினால் அ-சாண் நீளமும், ச-சாண்பருமனும், அல்லது கூகூ-விரற்கடை பிரமாணமு முள்ளது.

(இதற்குள் கூகூ-தந்துவங்கள் அடங்கியிருக்கின்றன)

அவையாதெனில்:—

வாசல்கள்-கூ, பொறி-ரு, புலன்-ரு, ஆதாரம்-சு, மண்டலம்-ங, நாடி-ரு, வாய்வு-ரு, தாது-எ, இராகம்-அ, கோசம்-ரு, கரணம்-ச, அவஸ்தை-ரு, குணம்-ங, மலம்-ங, வியாதி-ங, ஆக—கூகூ.

இவைக்கு விவரம்.

செவிகள்-உ, கண்கள்-உ, நாசிகள்-உ, வாய்-க,கு

யயம்-பெண்குறி, அல்லது-ஆண்குறி-க, குதம் அல்லது அபானவாயு-க, ஆக வாசல்கள்—கூ.

சுரோத்திரம்-க, தொக்கு-க, சட்சு-க, சிங்குவை-க, ஆக்ராணம்-க, ஆகபொறிகள்—ரு.

இவைகளினியற்கையாவன:—

சுரோத்திரமென்பது-செவி, இது ஆகாசத்தினிடமாய்நின்று சத்தத்தை யறியும்.

தொக்கு என்பது-உடம்பு, இது வாயுவினிடமாய்நின்று பரிசத்தை யறியும்.

சட்சுவென்பது-கண், இது தேயுவினிடமாய் நின்று ரூபத்தை யறியும்.

சிங்குவை யென்பது-நாக்கு, இது அப்புவினிடமாகநின்று ரஸத்தை யறியும்.

ஆக்ராணமென்பது-மூக்கு, இது பிருதுவியினிடமாக நின்று கந்தத்தை யறியும்.

இவைகளே ஞானேந்திரிய மென்னப்படும்.

கன்மேந்திரியமாவன:—

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் ஆக—ரு.

இவைகள் முறையே வசனம், கமனம், தானம், விசாகம், ஆனந்தம் இவைகளாம்.

ஆகாசத்தினிடமாகநின்று சொலிப்பது, வாக்கு.
வாயுவினிடமாகநின்று கவனிப்பது, பாதம்.
தேயுவினிடமாகநின்று இடல்ஏற்றலானபாணி.
அப்புவினிடமாகநின்று சுல்மலாதிகளைதல்பாயுரு.

பிருதிவியினிடமாகநின்று ஆனந்திப்பது, உபஸ்தம்.

இவைகள் கன்மேந்திரியங்களாம்.

தன்மாத்திரைகளாவன:—

சத்தம், பரிசம், ரூபம், ரஸம், கந்தம்; ஆக—ரு.

சத்தமானது-ஆகாசத்திலும் செவியிலு மொடுங்கு[ம்;
பரிசம்-வாயுவிலும் உடம்பிலு மொடுங்கும்;
ரூபம்-தேயுவிலும் கண்ணிலு மொடுங்கும்;
ரஸம்-நீரிலும் நாவிலும் ஒடுங்கும்;
கெந்தம்-பிருதிவியிலும் மூக்கிலும் ஒடுங்கும்;
வசனம்-வாக்கிலும் ஆகாசத்திலும் ஒடுங்கும்;
கமனம்-வாயுவிலும் காலிலும் ஒடுங்கும்;
தானம்-தேயுவிலும் கையிலும் ஒடுங்கும்;
விசாகம்-அப்புவிலும் முகத்திலும் ஒடுங்கும்;

ஆனந்தம்-பிருதிவியிலும் குய்யத்திலும்லடுங்கும்;

ஆக பொறி ரு-க்கும் புலன்கள் ரு-க்கும்

விவர மிதுவாம்.

ஆதாரமாவன:—

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை இவைகளாம்.

இவைகளின் விவரம்.

மூலாதாரமாவன:—காலெலும்பு உ-ங் கதிரெலும்புங்கூடிய இடங்குய்யம்; குய்யத்துக்கும் குதத்துக்கும்நடுவே குண்டலிவட்டமாய் அந்த வட்டத்துக்குநடுவே திரிகோணமாய் அந்ததிரிகோணத்துக்கு நடுவே நாலிதழுடைய ஒருபுட்பவட்டமாய் கட்பம் பூப்போன்றிருக்கும் அந்தப் புட்பத்துக்கு நடுவில் ஓங்காரவெழுத்து நிற்கும் அந்த ஓங்காரத்திற்கு நடுவில் விக்கினேஸ்வரனும், வல்லபைசத்தியுமெழுந்தருளி யிருப்பார்கள்; பச்சைநிறமுள்ளது; அந்த நாலிதழிலும் நிற்கும் அட்சரங்களை இதற்கடியில்வரும் மூலாதாரசக்கரத்திற் காண்க.

இதற்குப்பிரமாணம் திருமந்திரம்.


மாமலர் நாலையும் வட்டத்தின் மேலிடு
மாமலர் நாலிலும் வவ்வாதி சவ்விடு
மாமலர் நாலிலே வட்டத்தி னுள்ளே
ஓமென விநாயகன் உலாவி நின்றானே.

ஒருவீடு வாசற் கிருவீடு மேலே
கருவீடு வாசற் கிருவிரல கீழே
உருவீடு சோதியு மங்கே யுதித்தன
திருவுடை யாரிது தேர்ந்தறி வாரே.

இட்டா னறிந்திலன் ஏத்தாளும் கண்டிலள்
தட்டா னறிந்தான் ஒருவர்க் குரைந்திலன்
மெட்டாய் வளர்ந்து அதின்மேல் விநாயகன்
அட்டாங்க யோகத் தமர்ந் திருந்தானே

ஓங்கார மென்னும் அவளொரு பெண்ணும்
நீங்காப் பச்சை நிறம தகந்தவள்
ஆங்கார மூடர் ஐவரைப் பெற்றவள்
ரீங்கா சனத்தி லினி திருந்தாளே.

இது:—மூலாதாரமாம்.



முக்கோணம்

நாதலிங்கமலம்

மாணிக்கநிறம்

கணபதி

குண்டலிசத்தி

ஓங்காரம்.

இவை யெல்லாம் அவ்விடத்தில் தோன்றுவதுபோ லிருக்கும்.


இதற்கு இரண்டு விரற்கடைக்கு மேலிருப்பது சுவாதிஷ்டானமாம்.

அது நாற்சதுரமும், அச்சதுரத்தினடுவே ஆறிதழ்களையுடைய ஒருபுட்பவட்டமும், அதன்மத்தியிலே லிங்கபீடமும் வீணைத்தண்டி னடியுமாயிலங்கி அதினடுமத்தியிலே நகார எழுத்து நிற்கும்.

அந்த நகாரத்தினடுவில் பிர்ம்மாவும் சரஸ்வதியும் வீற்றிருப்பார்கள்.

இது பிருதிவியின் கூறாகும்; பொன்னிறமாம், அந்தப் புட்பத்தின் ஆறிதழிலுமுள்ள அட்சரங்களை இதற் கடியில்வரும் சுவாதிஷ்டான சக்கரத்திற் காண்க.

இது:—சுவாதிஷ்டானமாம்.



நாற்சதுரம்

ஆறிதழ்கமலம்

செம்பொன்னிறம்

பிர்ம்மா


சரஸ்வதி

நகாரம்.

இவையெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவதுபோலிருக்கும்.

இதற்கு ௨-விரல் பிரமாணத்துக்குமேல் இருப்பது மணிபூரகமாம்; இது கோழிமுட்டைபோல ௩௨-நரம்பு நாடிகளுஞ்சூழ நாடிக்கெல்லாம் வேருள்ளது, இதை உள்ளறிவுள்ளோர் உந்திக்கமலமென்று சொல்லுவார்கள். இது தொப்புளுக்குநேரில் அப்புஸ்தானத்தில் ஏழாம்பிறைக் கிணங்கியிருக்குமாம்; இதினடுவே பத்து இதழையுடைய ஒருபுஷ்பம் வட்டமாயிருக்கும், அந்த் புஷ்பத்தினடுவில் மகாரவெழுத்து நிற்கும், அந்த மகாரத்திற்கு நடுவில் மகாவிஷ்ணுவும், மகாலட்சுமியும் எழுந்தருளியிருப்பார்கள்; பளிங்குநிறமுள்ளது. அந்தப் பத்திதழிலும் நிற்கின்ற அட்சரங்களை இதற்கடியில் வரும் மணிபூரகச் சக்கரத்திற்காண்க.

இது:—மணிபூரகம்.



மூன்றாம்பிறை

பத்திதழ்கமலம்

மரகதநிறம்

விஷ்ணு

லட்சுமி


மகாரம்.

இவையெல்லாம் அவ்விடத்தில்

தோன்றுவது போலிருக்கும்.

இதற்குமேற் பத்து விரற்கடை பிரமாணமுள்ள இடத்துக்கு மேல் உள்ளது அனுக்தமாகும், இது இருதயகமலமாம்; தேயுஸ்தானத்தில் முக்கோண மாயிருக்கும், அந்த முக்கோணத்தி னடுவில் பன்னிரண் டிதழையுடைய ஒரு புட்பவட்டமா யிருக்கும், அந்த புட்பத்தினடுவில் சிகாரவெழுத்து நிற்கும், அந்த சிகாரத்தினடுவில் ருத்திரனும்பார்வதியும் அமர்ந்திருப்பார்கள். அக்கினி நிரத்தையுடையது, அந்தப்பன்னிரண் டிதழிலுமுள்ள அட்சரங்களை இதற்கடியில்வரும் அனுகத சக்கரத்திற் காண்க.

இது—அனாகதமாம்.



பனிரண்டிதழ்கமலம்

முக்கோணம்

ஸ்படிகநிறம்

உருத்திரன்

பார்வதி

சிகாரம்.

இவை யெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவது போலிருக்கும்.

இதற்குப் பத்து விரற்கடை பிரமாணமுள்ள இடத்துக்கு மேலுள்ளது விசுத்தியாம்; இது கண்டஸ்தானத்திலே வாயுவுஸ்தானத்திலுள்ளது, அறுகோணமா யிருக்கும், அந்த அறுகோணத்தி னடுவில் பதினாறிதழையுடைய ஒரு புட்பவட்டமாயிருக்கும், அந்த புட்பத்தினடுவே வகாரவெழுத்து நிற்கும்; அந்த வகாரத்தினடுவில் மகேஸ்வரனும் மகேஸ்வரியும் எழுந்தருளி யிருப்பார்கள். கறுநிறத்தையுடையது, அந்தப் பதினாறிதழிலுமுள்ள அட்சரங்களை இதற்கடியில் வரும் விசுத்தி சக்கரத்திற் காண்க.

இது:—விசுத்தி.



பதினாறிதழ்கமலம்

அறுகோணம்

மேகநிறம்

மகேஸ்வரன்

மகேஸ்வரி

வகாரம்.

இவை யெல்லாம் அவ்விடத்தில்
தோன்றுவது போலிருக்கும்.

—0—

இதற்கு ௧௨-விரற்கடை பிரமாணமுள்ள ஸ்தானத்துக்குமேல் ஆக்ஞை லலாடபீடத்தி லிருக்கின்றது. வீணாத்தண்டின் முடியுமாய் ஊடுருவி பொன்போன்ற வடிவமுற்று நிற்கும், நெற்றிப்புருவத்தின்வெளியாய் ஆகாசஸ்தானத்தில் மூன்றிதழையுடைய ஒரு புட்பத்தினடுவே யகாரவெழுத்தோ டிணங்கி நிற்கும், அந்த யகாரத்துக்கு நடுவில் சதாசிவமும் மனோன்மணியும் எழுந்தருளி யிருப்பார்கள். மேகநிறத்தையுடையது, இதிலுள்ள அட்சரங்களை இதற்கடியில்வரும் ஆக்ஞை சக்கரத்திற் காண்க.

—o—

இதற்குத் திருமந்திரம்.

ஐம்பதெழுத்தே அமர்ந்தவேதங்கள்
ஐம்பதெழுத்தே ஆகமாதிகள்
ஐம்பதெழுத்தின் அறிவையறிந்தபின்
ஐம்பதெழுத்தே ஐந்தெழுத்தாமே.

—o—

இது:—ஆக்ஞை.



ஸ்ரீ

ஹ ய உ

மூன்றிதழ்கமலம்

வட்டம்.

படிகநிறம்

சதாசிவம்

மனோன்மணி

யகாரம்.

இவையெல்லாம் அவ்விடத்தில் தோன்றுவதுபோலிருக்கும்.

—o—

ஆறாதாரவிவரம்.

மூலகாரணமாயிருக்கும் இந்தப்படத்தில் சங்கை நேரிடுமேயானால் அகமும் புறமும் ஆராய்ந்து பார்த்தால் தெரிய வரலாம்.

—:0:—

திருமூலர் திருமந்திரம்.

ஒருவிடுவாசலுக் கிருவிரல்மேலே
கருவிடுவாசலுக் கிருவிரல்கீழே
உருவிடச்சோதியும் உணர்வதுமாங்கே
திருவுடையாளிது சேர்ந்தறிவாளே.

மூலாதாரம்.

க. குதத்திற்கும்
லிங்கத்திற்கும் நடு.

சுவாதிட்டானம்.

உ. லிங்கத்திற்கும் நாபிக்கும் நடு
௩. நாபிக்கமலம்
௪. இருதயகமலம்
ரு. கண்டத்தானம்
௬. லலாடத்தானம்.

—:0:—

சந்திர மண்டலம்.

எ. மூலாதாரந் தொடங்கி ஒவ்வோரெழுத்தை முன்னிட்டுக்கொண்டு சிரசுனடுவே கோடி சூரியர் உதயமானாற்போல பிரகாசிக்கும், இந்த அமிர்தகலை அக்கினி மண்டலத்தை நோக்கி ஜோதியாய் நிற்கும்.

—o—

ஆதித்த மண்டலம்.

அ. இருதய கமலத்தில் அறுகோணமாய் எட்டிதழுடைய ஒரு புஷ்பமாயிருக்கும் இதில் வாழைப்பூப்போல் கீழ்நோக்கியிருக்கும்.

—o—

அக்கினி மண்டலம்.

கூ. பிரிதிவும் அப்பும் கூடினவிடத்தில் நாற்சதுரமாய் னடுவே முக்கோணமாய் நாலிதழுடைய ஒருபுஷ்பமா யிருக்கும்.

இதுவே ஆறுதார விவரமாம்.

—:o:—

இனி-மண்டலங்களாவன:—

அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம் ஆக—௩.

இதில் அக்கினி மண்டலமானது மூலாதாரத்திற்கு இரு விரற்கடைக்கு மேலிருக்கின்றது.

ஆதித்தமண்டலம் உந்திக்கு நாலு விரற்கடைக்குமே லிருக்கின்றது.

சந்திரமண்டலம் - கோடிசந்திர சூரியர்களுதயமானதுபோல சிரத்தினடுவில் நிலையாய்நிற்கும், இதை அமுர்தகலையென்று சொல்வதுமுண்டு, அமுர்தம் மேல்நோககி அக்கினி கீழ்நோக்கி சரியாய் நிற்கும், இதற்குனடுவில் பராசத்தி எழுந்தருளியிருப்பாள், இதற்குப் பிரமாணம்.

திருமந்திரம்.

மேலைநிலத்தில் மேதகுபெண்ணை
மூலநிலத்தில் முளைத்தெழுஞ்சோதியே
ஏலவெழுப்பி யிசைந்துசந்திக்க
பாலருமாவார் பார்ந்திநந்தியாணையே.

—:0:—

இனி நாடி ௰-க்கும் விவரம்.

இடைகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, உசா, அலம்புடை, புருடன், குரு, சிங்குனி ஆக நாடி—௰.

இவைகளில் இடை, பிங்கலை, சுழிமுனை, இம்மூன்றும் மூலாதாரத்தைத்தொட்டு ஆறுதாரம் ஆறிலும், மண்டலம் மூன்றிலும் ஊடுருவி முட்டிநின்று இடை பிங்கலைஇரண்டும் சுழிமுனையிலே இணங்கி கத்தரிக்கோல்போல் பாகமாய் வீணைத்தண்டுக்கு வில்லுநாணிட்டாற்போல கபாலத்தை முட்டி குதிரை முகமூற்று நாசியளவும் பற்றிநிற்கும்.

இம்மூன்று நாடியும் இப்படிநிற்க காந்தாரியானது நாபிஸ்தானத்தில் தோன்றி எழு வகையாகப்பிரிந்து இச்சாசொரூபமாய் கண்டத்தைப்பற்றி நாடியளவும் நிற்கும்.

அத்தி-உசா இவ்விரண்டும் பத்து நாடியாய்ப்பிரிந்து கண்களிரண்டிலும் பற்றிநிற்கும்.

அலம்புடை புருடன், பன்னிரண்டு நாடியாகப்பிரிந்து ஜடலத்திலுண்டாகிய எலும்பு, நரம்பு, உ

ரோமம் இவ்வகளில்பரவி பர்கமாறி வலது இடது செவிகளைப் பற்றிநிற்கும்.

குகு வென்பது-நாபிஸ்தானத்திலேதோன்றி, குதத்தைப்பற்றி நிற்கும்.

சிங்ஙனியோவெனில் நாபியிலேதோன்றி, குய்யத்தைப்பற்றி நிற்கும், இவைகளில் உகூ-நாடி யுற்பத்தி யானது காண்க.

இனி-வாயுக்களாவன:—

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் ஆக வாயு—ய.

இதனுடன் வயிரவன், முக்கியன், அந்தரியாமி, பிரவஞ்சனன் ஆகிய நான்கும்சேர வாயுக்கள்-யச.

—:0:—

பிராணவாயுக்களாவன:—

பிராணவாயுவானது லலாடமத்தியிலே தோன்றி சித்திரநாடியிலே விழுந்து மூலாதாரத்திலே ஓம்-என்று உதித்து நாபிசக்கரத்திலே ரீம் - என்று முட்டி இடைகலை பிங்கலைகளிலே ஓடி கபாலத்தை

ச்சுற்றி நாசியின் வழியாய்ப்புறப்பட்டு நான்கு விரற்கடை பிரமாணங் கழிந்துபோய் எட்டுவிரற்கடை பிரமாணங் மீய்ந்து தானின்ற ஸ்தானத்திலேயே தாக்குகின்றது.

இப்படி தாக்குவது உத்தமதேசிக்கு நாழிகை ஒன்றுக்கு முன்னூற்றறுபது சுவாசமாகக் கொல்லன் துருத்திக்குட் காற்றேறுவதுபோல ஏறும்

இப்படி ஏறுகின்ற சுவாசமானது இராப்பகலாகிய அறுபது நாழிகை யுள்ளநாள் ஒன்றுக்கு (உகதசூா) சுவாசமாச்சுது, இவ்விதமாயிணங்கி யவற்றுள் (எதஉா) சுவாசம் வெளிப்படும், மற்றவை உள்ளடங்குமென்றறிக.

அபானவாயுவானது, குதத்தையும் குய்யத்தையும்பற்றி மலமூத்திராதிகளைக் கழித்துவிடும்.

வியானன், தோளிலேநின்று பரிசங்களையறிவித்துக் கலைகளை நிறைவிக்கும்.

உதானன், உதராக்கினியை யெழுப்பி உண்ட அன்னசாரத்தை நாடிகளிற்செலுத்திச் சரீரத்தை வளர்க்கும்.

சமானன், இவையாவையும் சமப்படுத்தி பேதமில்லாமல் நிரவலாகி வைக்கும்.

கூர்மன், நகைப்பும் முகலட்சணமும் கண்களிப்பும் புளகமும் மயிர்க்கூச்சலும் கொட்டாவியு முண்டாக்கும்.

நாகன், முக்கலும் சோம்பலும் திமிரமும் விக்கலும் வீங்கலு முண்டாக்கும்.

கிரிகரன்; புருவமெற்றுவித்தும் தும்முவித்தும் அழுவித்தும் திரியும்.

தேவதத்தன், விழிக்கும்பொழுது வஞ்சித்து ஓட உலாவ உயுத்தஞ்செய்யத் தலைப்படும்.

தனஞ்சயன், பிராணன் சரீரத்தைவிட்டு வெளிப்பட்டபோதிலும் தான் பிரியாதுநின்று உடம்பை வீங்குவித்தும் விரிவித்தும் புழுவித்தும் கொய்தும் கபாலத்தைப் பிளந்துபோம்.

வயிரவன், காலெலும்புங் கதிரெலும்புங் கூடிய விடத்திலே நின்று உடம்பில் அவஸ்தையுண்டாக்கி ஈளை இருமல்முதலான நோய்களையுண்டாக்கும்.

மூக்கியன், கையெலும்பு (உ-ம்) கதிரெலும்புங்

கூடிய விடத்திலேநின்று சரீரத்தின் யாக்கைகளைச் சிறக்க நிறுத்தும்.

அந்தரியாமி, புருஷனுக்கு வாகனமாய்நின்று பிராணவாயுவுந் தோற்றுவிக்கும்.

பிரவஞ்சனேனெனில், பிரணவத்துக் கிருப்பிடமாயிருந்து பிரவஞ்சனும் அந்தரியாமியும் சரீரத்திற்கு அடையாணியாகவும் அச்சாணியாகவும் இருப்பார்கள்.

—:0:—

தாதுக்களாவன:—

ரசம், உதிரம், மாம்ஸம், மேதை, அஸ்தி, மச்சை, சுக்கிலம் ஆக—எ.

—:0:—

இராகங்களாவன:—

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, அக்ங்காரம் ஆக—அ.

இவைகளில் காமமாவது - ஆசை, குரோதமாவது-கோபம், லோபமாவது-உள்ளதை யொளித்தல்

பொச்சரிப்புக்கொள்ளுகை, மோகமாவது-தானல்லா ததார்மரித்தால் தான் மரித்தாற்போலிருக்கை, மத மாவது-கெர்வமுற்றுத் தானதர்ம பரோபகாராதிக ளை விலக்குதல்; மாச்சரியமாவது - ஒன்றைக்கண்டு மகிழ்தல், இடும்பையாவது-தானே சர்வாதிகாரியெ ன்று நினைத்து யாவரையும் இகழ்தல், அகங்கார மாவது - தன் குற்றங்களையறியாது பிறர்சொல்லைக் கேட்டுக கோபித்தல்.

—:0:—

கோசமாவன:—

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞா னமயம், ஆனந்தமயம் ஆக—ரு.

—:0:—

இவைகளில் தாதுக்களா லெடுத்தது

அன்னமயகோசம்.

அன்னசாரத்தினாலே பிராணனும், பலனும்அட ங்கியது, பிராணமயகோசம்.

பலத்தினுலேவந்து தோற்றப்பட்டது - மனோமயகோசம்.

அம் மனத்தின்கண்ணே தோற்றப்பட்டது-விஞ்ஞானமாதலால் அது விஞ்ஞானமயகோசம்.

இதற்குப் பிரமாணம்

சித்தியார்

விருத்தம்.

தூலமாமன்னகோசம் தூலத்திற்பிராணனுற்றால்
வாலியபிராணகோசம் மன்னுமிம்மனோமயத்தால்
சால்வேபுத்தியுற்றால் தருமம்விக்ஞானகோசம்
ஏலவேவிடயமுன்போ லியன்றதுகோசமாமே.

—:0:—

அந்தக்கரணங்களாவன:—

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆக—ச.

இவைகளில் மனம்-நினைக்கும், புத்தி- நிச்சயிக்கும, அகங்காரங்கொண்டெழுப்பும், சித்தம் மூன்றுக்கும் காரணமாயிருக்கும், இதற்குப்பிரமாணம்.

—0—

சித்தியார்

விருத்தம்.

மனத்துக்கு விவரம்.

ஐயமுஞ்சலனமு நிற்கச்செய்தலும்
வெய்யவெங்கொடுமையும் விதப்பமேவலும்
பொய்யதுவுணர்த்தலும் பொருத்தநோக்கலும்
மையல்கொண்டிடதலு மறிவுமாண்மையும்.

புத்திக்கு.

அருளுறவிருத்தலு மபயங்காத்தலும்
மருளுறுபுண்ணிய பாவமாட்சியும்
தெருளுறுவிகாரமுந் திடப்படுத்தலும்
பொருள்தருமூவகைப் புத்தியாகுமே.

அகங்காரத்துக்கு.

பாகமூர்க்கமும் பண்பிலாண்மையும்
மோகமுஞ்செயவெண் முடிவிலாமையும்
சோகமுங்கீழ்மையும் துரோகசொப்பனம்
மாய்கையுஞ்செய்ய மாங்காரமாதலால்.

—o—

சித்தத்துக்கு.

அருந்தவமுயற்சியு மடிகள்பேணலும்
விருந்தெதிர்கொள்கையும் மேன்மைகூறலும்
வருந்தினர்யாவரு மேத்தவாழ்தலும்
திருந்தியவிச்செயல் சித்தமாகுமே.

—:0:—

அவஸ்தையாவன:—

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆக—௫.

இவ்வைந்தினுள் சாக்கிரமானது புருவமத்தியில் நின்று ராஜ ஓலக்கம்போல சதுரங்கபலத்துடனே யிருந்து சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் இவ்வைந்துடனும்; வசன, கமன, தான, விசற்க, ஆனந்தமென்னும் அவ்வைந்துடனும்; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இந்நாலும்; சேர்ந்து கருவிகளுடன் சன்னதியில்சேவிக்க தான் பராசத்தியருளாலே வியக்தனாய் சுகதுக்கங்களை அறிந்து நின்றபோது சாக்கிரமாயின.

—o—

இதற்குப்பிரமாணம்

திருமந்திரம்.

கண்டனவைந்துங் கலந்தவோரைந்தும்
உண்டனநான்கும் ஓங்கியதுணர்ந்தபின்
பண்டையிறுதி பரந்ததுசாக்கிரம்
அண்டமுந்தாறு யமர்ந்ததுகாணே.

சொப்பனமாவது கருவி கரணாதி (யசு-ல்) கருவி பத்தும கண்டத்தில் நிற்கும்.

மற்றகரணாதி (சு-ம்) சுழுத்தியோடு சிவாத்துமாவைக்கூடி சுவாச யிருதயத்திலேநின்றபோது கண்டவை கேட்டவை ஒன்றும் பிறர்க்குச் சொல்லப்புலப்படாதபோது சுழுத்தியாம்.

—o—

இதற்குப்பிரமாணம்

திருமந்திரம்.

ஆனமனமும் அறிகின்றபுத்தியும்
ஊனையிழந்துநின் றுள்ளேஉயிர்ப்பெய்தி
தானமிழந்து தயங்கியவாறுபோல்
ஊனையிழந்த சுழுத்தியதாமே.

துரியமானது சுழுத்தியைவிட்டுக் கரணமொன்றுடனே சீவாத்துமா நாபிஸ்தானத்தில் நின்றபோது உசுவாசம் நிசுவாசம் பிறக்கும், ஆகையால் இதற்குத் துரியமென்று பெயர்.

இதற்குப்பிரமாணம்

திருமந்திரம்.

தானத்தெழுந்து திரியுந்துரியதானம்
வானத்தெழுந்துபோய் வையம்பிறக்கிட்டு
கானத்தெழுந்து கருத்தின்தலையிலே
ஊனைத்தவிர்ந்து ஒளித்திருந்தானே.

—:o:—

துரியாதீதமாவன:—

கருவி கரணாதிபதினாலும் பற்றற்று சீவாத்துமாதானே மூலாதாரத்திற் சென்றொடுங்கி மலம், மத்தம், மாய்கை பரிசங்களை யறியாமல் நின்றபோது துரியாதீத மென்றுபேராம்.

—o—

திருமந்திரம்.

துரியமிருப்பது சாக்கிரத்துள்ளே
நரியள்பதினான்கும் நஞ்சுண்டற்றது

பரியபுரவியும் பாரிப்பரந்திடம்
துரியமிருந்திடஞ் சொல்லவொண்ணுதே.

—:o:—

கேவலாவஸ்தையாவன:—

அதீதத்தை முதலாகக்கொண்டு ஒருவனை முன்னொருகாலத்தில் நாமறிந்திருக்க அவன்சிறிதுநாளைக்குப்பிறகு நமதுமுன்வந்து என்னையறிவீராவென்ன நானறியேனென்று நின்றவிடம் அதீதம், அதைக்குறித்து நிதானித் துணருமிடம்துரியம், ஆமோ அல்லவோவென்று சந்தேகிக்குமிடம் சுழுத்தி, மனத்தோற்றமுற்றது சொப்பனம், நீ இன்னனென்று நிச்சயித்துரைப்பது சாக்கிரமாம்.

—o—

இதற்குப்பிரமாணம்

அறிவானந்த சித்தியார்.

முன்னே அறிந்தும் அறியாதிருந்ததுமுதல்தீதம்
பின்னேநினைவின்றி மூச்சிட்டறிந்தபிறைதுரியம்
மன்னேமயங்கியை யுற்றசுழுத்திமனநினைவால்
தன்னேர்கனவது தானறிந்தொத்ததுசாக்கிரமே.

—:o:—

மத்தியாவஸ்தை.

சாக்கிரத்திற் சாக்கிரம்; சாக்கிரத்திற் சொப்பனம்; சாக்கிரத்திற் சுழுத்தி; சாக்கிரத்தில் துரியம்; சாக்கிரத்தில் துரியாதீதம்.

இவற்றுள் சாக்கிரத்துள் சாக்கிரமானது கருவி கரணங்கள் பிரியாமல் ஒத்து நிற்பதாம்.

சாக்கிரத்திற் சொப்பனமானது, தான் நிச்சயம் போல் கண்டது கேட்டது சொல்லறியாததுவாம்.

சாக்கிரத்திற் சுழுத்தியானது, நினைவுமாத்திரம் பொய்யாய் பிறருக்குச் சொல்லவொண்ணு திருக்கை, இது உசுவாசநிசுவாசமாக இருத்தலாம்.

சாக்கிரத்தில் துரியமானது, சகல கருவிகரணாதிகளுக்கும் அடங்கி ப்ருமிருக்கையும் நித்திரை வருகையும் அவசமாய் விழுகையும் புருவமத்தியிலே நடுச்சக்கரத்திலே யுள்ளது.

—:0:—

மேலாவஸ்தையாவன:—

புருவமத்தியில் நடுச்சக்கரத்தில் இரண்டங்குல பிரமாணத்திலேயுள்ளது சொப்பனம்.

இதற்குமேல் இரண் டங்குலத்தி

பிரமாணத்திலுள்ளது

சுழுத்தி.

—o—

இதற்குமேல் இரண்டங்குலத்தி

பிரமாணத்திலுள்ளது.

துரியம்.

—o—

இதற்குமேல் இரண்டங்குலத்தி

பிரமாணத்திலுள்ளது.

துரியாதீதமாம்.

—:o:—

இதற்குப்பிர்மாணம்

திருமந்திரம்.

காலங்கிரீரிற் கலந்துடனாகாசம்
மாலங்கியீசன் பரமசதாசிவன்
மேலஞ்சுசென்று விரவவல்லார்க்குக்
காலனார்லூலை கனவிலுமில்லையே.

—:o:—

அவஸ்தையாவன:—

சகலாவஸ்தை, கேவலாவஸ்தை, சுத்தாவஸ்தை ஆக—௩.

சகலாவஸ்தையானது, சாக்கிரத்தில் கருவிகரணாதிகளுடன்கூடி அந்தக்கரணங்களுக்கு நினைவாயிருக்கும்.

கேவலாவஸ்தையோவெனில், மூலாதாரத்தைப்பற்றி ஆணவம்மேலிட்டு ஒன்றுந்தெரியாமல் கிடக்கை.

சுத்தாவஸ்தையோ, சகலாவஸ்தையில் கருவிகரணாதிகளுடன் கூடிநின்று அலைச்சல்பிறவாமை கேவலாவஸ்தையில் ஆணவக்கிடையில் அறியாமைபிறவாமலும் ஆசாரியரனுக்கிரகத்தினாலே இவை யிரண்டிலும் பற்றாமல் சுற்றத்தோடே கூடிநிற்கை.

குணங்களாவன:—

ராஜஸம், தாமஸம், ஸாத்விகம் ஆக—௩.

ராஜஸமானது, அத்தி-களிப்புற்றிருத்தல், அகங்காரம், போகம், அத்தசேதம், இடும்பை, கீர்த்திகொடைதருதலாம்.

தாமஸமானது-நித்திரை, களவு, கள்ளுண்ணல், சோம்பு, வெட்டி, சிரிப்பு இவைகளாம்.

ஸாத்விகமோவெனில், கொல்லாமை, பொய்யாமை, அவருக்கை, பொறையுடைமை, விரதமுடைமை, அடக்கமுடைமை, யாவரையும் இகழாதொழித்தலாம்.

—:0:—

இவைகளில் ஒவ்வொன்றுக்கு

மும்மூன்று குணங்கள்

காண், க.

தாமஸராஜஸம், தாமஸதாமஸம், தாமஸஸாத்வீகம், தாமஸகுணவிரிவே- ஸாத்வீகதாமஸம், ஸாத்வீகராஜஸம், ஸாத்வீகஸாத்விகமாம்; ஸாத்வீககுணவிரிவே-ராஜஸதாமஸம், ராஜஸஸாத்வீகம், ராஜஸராஜஸம்-ராஜஸகுணவிரிவே.

—:0:—

மலங்களாவன:—

ஆணவம், மாயை, காமியம் ஆக—௩.

இவைகளில் ஆணவமானது, ஆத்மாவின் அறிவை மறந்து யான் எனதென்றும், அறியாமையெவையும் பிறப்பித்து, தன்னுடைமையும் புத்திர மி

த்திர களத்திராதிகளும், பிரியமாய் இதில் நாம்மய ங்குகிறோமென்று இவனுக்குத் தெரியாமல் சின.த ட்பித்து ஆசை யுண்டாக்கிக்கொண்டு தன்னதென் றிருக்கை.

மாயையானது வேறொருவருடைய சொத்தைத் தன்னதென்று இடையூறு விளைப்பதும் உபத்திர விக்க யத்தனிப்பதுமாம்.

காமியமானது, முந்திய இரண்டு விதத்திற்கு ஒ த்திருப்பதும், இதாகிதத்தினுல் புண்ணியபாவங் களை யுண்டாக்குவதுமாம்.

இதன்றி மகா மாயையென்றும் திரோதான மெ ன்றும் இரண்டுவித மலமுண்டாம்.

மகாமாயையானது, தநுகரணபுவன போகங்க ளைக்கொடுத்து ஒன்றோடுவொர்வ்வாமல் புசிப்புகளு ம்வெவ்வேறாய் அறுதியாய் ஆத்மாவுக்கு என்போ கந்தவிர்ந்தாலும் இந்தத்தன்மை இரண்டு காலத்தி லும் ஒக்கும்.

ஆத்துமாவைத் தன்னிடத்திலும் இளைப்பாற்றி க்கிடத்த இடங்கொடுத்து பின்பு ஜனங்களுக்கும் பத்தியாயிருக்கும்.

திரோதானமானது, சிவசத்தியினது பதவியை த்திரோபாதவித்து நின்று, ஆத்மாக்களுக்குப் புண்ணிய பாவங்களையும் மட்டும்பொசிப்பித்து சிவசத்தியுடனே கூட்டும்.

ஈஷணை மூன்றாவன:—

அர்த்த ஈஷணை, புத்திரேஷணை, லோகேஷணை ஆக—௩.

இதுதன்னை யடைந்தானென்பதாம்:

—o—

வியாதியாவன:—

வாதம், பித்தம், சிலேத்துமம் ஆக—௩.

இவைகளில்-வாதமானது, வாயுவிலுற்பத்தியாகிப் பிராணவாயுவு பிரசண்டமாய் அக்கினியும், அப்பும் கலங்கில் வாதமாம்.

அக்கினிதிசையில்-வாயுகளும், ஆதாரத்தை தப்பாற்றி மிகவும் அசரித்து இதயகமலத்தை தழுன்றில் பித்தமாம்.

அப்பு, வாயு, தேயு இம்மூன்றும் உடலில் கலவாமல் கலங்கில் சிலேத்துமமாம்.

—:o:—

சரீரங்களாவன:—

ஸ்தூலம், சூக்ஷ்மம், காரணம் ஆக—௩.

சூக்ஷ்மதேகமானது, ஞானேந்திரியம் - ரு, கன்மேந்திரியம்-ரு, அந்தக்கரணம்-ச, பிராணவாயுவு-க, ஆக-௰ரு-ம் கூடியது.

இவ்விரண்டு தேகமும் பற்றற்று நிற்பதுகாரண தேகமாம்.

ஆக தத்துவம் கூசு-ம் சரி.

இதற்குப்பிரமாணம்

திருமந்திரம்.

முப்பதுமுப்பது முப்பத்தறுவருஞ்
செப்புமதனிடை கோயில்வாழ்பவர்
செப்புலதனிடை கோயில்சிதைந்தபின்
ஒக்கஅவரும் ஓடெடுத்தாரோ.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

தேவாரம்.

திருக்கண்டீச்சுரம்.

தானெழுமங்கிநீண்டா சழக்குடைபதிக்குநாதன் வாணிபங்தொண்ணூற்றாறு வருமிகமயக்கஞ்செய்யப், பேணியபதிக்குள்நின்று பிரியும்போதறிய மாட்டேன், சேணுயர்மாடமோங்கும் திருக்கண்டீச்சுரத்துளானே.

அவையடக்கம்.

தத்துவந்தொண்ணூற்றாறுந் தாழ்விலாவாய்வு பத்தும், மெத்தனாடிபத்தும் மெய்யுளேஆறாதாரம், சுத்தமாங்கரணநான்குந் தோற்றுமண்டலங்கள்மூன்றும், இத்தனையறியவல்லா ரிறையவராகுந் தானே.

—:0:—

திருநந்திதேவர்

ஆதி - திருவள்ளுவநாயனாராகிய

திருமூலதேவருக்கு உபதேசித்தருளிய

சித்தாந்தமும் வேதாந்தமுங் கடந்த

நாதாந்தமுடிவான

அமுர்தபஞ்சாட்சர துருவநிலையென்னும்

ஆ று தா ர

ஜீவோற்பத்தி சிந்தாமணியும்,

தத்துவதீபிகையும்,

முற்றிற்று.

கடவுள் துணை.

புத்தகவிளம்பரம்.

———:0:———

" இராமதேவர் சோதிடம் மூலமும் உரையும்,

உரோமரிஷிசோதிடம் மூலமும்உரையும், "

இவற்றுள் ஆண்பாலுக்குறியரேகைகளின் பலாபலனும் பெண்பாலுக்குறியரேகைகளின் பலாபலனும் ஜாதகங்கள் அநுபவமாகப்பார்க்க திரமையும் இருக்கின்றன.

கனவான்களே !

இந்நூலின் மேன்மையாதெனில், ஆண்பால் பெண்பால் இவ்விருவர்களுக்கும் உண்டாகிய இரேகைகளின்பெயரும் அவைகள்யிருக்கும் ஸ்தானமும் அவற்றின்குறியும் அந்தந்தரேகைகளுக்கு அநுபவமாகக்கூறும் பலாபலனும் ஜாதகஸ்புடஞ்செய்யும் திரமையும் பனிரெண்டு இராசிகளினும் ஒன்பது கிரகங்கள் நின்றநிலைகண்டுப் பலன்சொல்லும்சூட்சமும் குளிகனுடன் தூமாதி பஞ்சக்கிரகங்களின்நிலையும் பலனும் யெளிதிலுணரும்; இதனை ஒவ்வொரு கனவான்களும்வாங்கிக் கண்ணுற்றுக் களிப்படைவீர்களென மிகவும் நம்புகின்றனன்.

	ரூ.	அ.	பை.
உயர்ந்தகிளேஸ்கடிதம்	1	0	0
மட்டகடிதம்	0	12	0

கடவுள் துணை.

இப்போது அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கும் புத்தகவிளம்பரம்.

—— :o: ——

ஞானரசசாரமென்னும் சிவபஜனைகீர்த்தனை, ஞானக்கண்ணி, சிவஞானவெண்பா இவைமூன்று மிருக்கின்றன.	0	3	0
இந்துபாலவயித்தியபோதினி	0	10	0
சுப்பிரமண்ணியர்விஞ்சை	0	1	0
சடாட்சரவிருத்தம்	0	2	0
சடாட்சரமாரல்	0	2	0
விநாயகர்பூஜை	0	0	6
மழவைசிங்காரசதகம்	0	2	0
வேதநாயகம்பிள்ளைநீதிநூல்	0	3	0
சைவாநுஷ்டானவிதி	0	2	0
சந்தனநூல்சாஸ்திரம்	0	2	0
குலைமறுத்தல்	0	5	0
நந்திவாக்கியம்	1	4	0
புரூரவசக்கிரவர்த்திவாசாப்பு	0	4	0
குமாரதேவர்பதினாறுசாஸ்திரம்	0	10	0

திருவாதவூரர்புராணம் கிளேஸ்படத்துடன்	0	12	0
ஜீவோற்பத்திசிந்தாமணி	0	2	0
மயிலிராவணன்நாடகம்	0	4	0
ஆதிநாடகம்	0	4	0
பிரதாபமுதலியார்சரித்திரம் கிளேஸ்கடிதம்.	1	4	0
நாஞ்சிவவாதக்கட்டளை, கீதாசாரத்தாலாட்டு, சசிவர்ணன்சரித்திரம், சசிவர்ணபோதம், துவாதசநாமசங்கீர்த்தனமைந்து மிருக்கின்றன.	0	6	0

இப்போது அச்சிட்டுக்கொண்டுவரும் புத்தகவிளம்பரம்.

விக்கிரமார்க்கன்நாடகம்

குருக்ஷேத்திரநாடகம்.

ஆ-இரத்தினவேலுமுதலியார்,

வாணிவிலாசஅச்சுக்கூடத்தலைவர்,

சென்னை-நாராயணமுதலிவீதி 52-நெ, வீடு.

புத்தகவிளம்பரம்.

இராமதேவர்சோதிடம்மூலமுமுரையும்	0	12	0
மேற்படி கிளேஸ்கடிதம்	1	0	0
நந்திவாக்கியம்	1	4	0
அகத்தியர்தேவாரத்திரட்டுபடத்துடன்	1	4	0
மேற்படி கிளேஸ்படத்துடன்	1	12	0
திருவாதவூரார்புராணம் கிளேஸ்படத்துடன்	0	12	0
பழனிஸ்தலபுராணம்மூலமும்உரையும்	0	12	0
இந்துவயித்தியபோதினி	0	10	0
குமாரதேவர்பதினுறுசாஸ்திரம்	0	10	0
தஞ்சைதேவாரம்	0	4	0
திருவாசகம்கிளேஸ்படத்துடன்	0	8	0
குலேமறுத்தல்	0	5	0
மயில்ராவணன்நாடகம்	0	4	0
ஆதிநாடகம்	0	4	0
புரூரவசக்கிரவர்த்திவாசாப்பு	0	4	0
வேதநாயகம்பிள்ளைநீதிநூல்	0	3	0
சந்தனநூல்சாஸ்திரம்	0	2	0
சருவார்த்தசிந்தாமணிகிளேஸ்	0	2	0
சந்தானதீபிகைகிளேஸ்	0	2	0
சைவானுஷ்டானவிதி	0	2	0
சடாட்சாரமாலை	0	2	0
சடாட்சாரவிருத்தம்	0	2	0
மழவைசிங்காரசதகம்	0	2	0